PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2


TAMIL LANGUAGE PRIMARY 4 - 2013

PAPER 1 – COMPOSITION

# கட்டுரை

40 நிமிடங்கள் 20 மதிப்பெண்கள்

கீழ்க்காணும் படத்தொடரைப் பார்த்து 60 சொற்களில் ஒரு கட்டுரை/ கதை எழுது. கட்டுரை /கதை எழுதுவதற்கு அடியிலுள்ள சொற்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



| | |
|---|---|
| அடுக்குமாடி கட்டடம் | தொடர்பு கொண்டு |
| சண்டை | தகவல் |
| பூத்தொட்டி | அவசரமாக |
| தள்ளிவிட்டாள் | அழுதான் |
| உயிர்க்கொல்லிக் குப்பை | சமாதானப்படுத்தினார் |

வேற்றுமை உருபு

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிக பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (5 மதிப்பெண்கள்)**

மாறன் 'கல கல' எனச் சிரித்துக்கொண்டே நீண்ட நேரத்துக்குத் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தான். அவன் 'டாமும் ஜெரலும்' என்ற (Q1) ____________ பார்த்து வயிறு குலுங்கச் சிரித்தான். இரவு மணி பன்னிரண்டைத் தாண்டியதால் (Q2) ____________ தூக்கம் வந்தது. அவன் பார்த்த கேலிச்சித்திரத்தைப்பற்றி நினைத்துக்கொண்டு தூங்கினான். அதனால், "ஹ ஹா! ஹ ஹா!" எனக் (Q3) ____________ உரக்கமாகச் சிரித்தான். அந்தச் சத்தத்தைக் கேட்டு (Q4) ____________ பெற்றோர், அவனது அறைக்கு ஓடிச் சென்றார்கள். அங்கே, மாறன் தூக்கத்தில் யாரோ (Q5) ____________ பேசுவதைக் கண்டு சிரித்தார்கள். அவர்கள் உடனே அவனை எழுப்பினார்கள். தான் கண்டது கனவு என்பதை உணர்ந்தபின் அவனும் சிரித்தான்.

1. (1) கேலிச்சித்திரத்தை
   (2) கேலிச்சித்திரத்தின்
   (3) கேலிச்சித்திரத்துக்கு
   (4) கேலிச்சித்திரத்தோடு ( )

2. (1) அவனுடன்
   (2) அவனிடம்
   (3) அவனில்
   (4) அவனுக்கு ( )

3. (1) கனவுடைய
   (2) கனவில்
   (3) கனவால்
   (4) கனவிலிருந்து ( )

4. (1) மாறனுடைய
   (2) மாறனால்
   (3) மாறனிடமிருந்து
   (4) மாறனுக்கு ( )

5. (1) ஒருவரை
   (2) ஒருவரது
   (3) ஒருவரிடம்
   (4) ஒருவரில் (

செய்யுள்/பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (5 மதிப்பெண்கள்)**

6. ஆறுவது ______________.

(1) சினம்
(2) உணவு
(3) வெந்நீர்
(4) வெப்பம் ( )

7. இயல்வது ______________.

(1) கரவேல்
(2) விளம்பேல்
(3) விலக்கேல்
(4) கைவிடேல் ( )

8. ______________ மறவேல்.

(1) பணம்
(2) கல்வி
(3) நன்றி
(4) பண்பு ( )

9. அன்னையும் ______________ முன்னறி தெய்வம்.

(1) இறைவனும்
(2) பிதாவும்
(3) நண்பனும்
(4) சகோதரனும் ( )

10. ______________ அழகு முகத்தில் தெரியும்.

(1) விழியின்
(2) முகத்தின்
(3) சிரிப்பின்
(4) அகத்தின் ( )

## தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் பகுதியைக் கவனமாகப் படி. பின்னர் கேள்விகளுக்கு மிகப் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

தமிழ் நாட்டில் ஓர் அரசன் இருந்தான். அவன், "நம்ப முடியாத கதையைச் சொல்பவருக்கு ஆயிரம் தங்கக் காசுகள் தருவேன்!" என்றான். ஊர் மக்கள் ஆவலுடன் பலவகையான கதைகளை அரசனிடம் கூறினார்கள். அவன் ஒவ்வொரு புதுமையான கதையையும் கேட்டுவிட்டுக் கதையைச் சொல்பவரிடம் ஆயிரம் பழுப்புக் கற்களைக் கொடுத்து, "உங்கள் கதையை நான் நம்புகிறேன்!" என்று சொல்லிவிடுவான். ஆயிரம் தங்கக் காசுகள் கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்தில் அவர்கள் சோகத்துடன் வீடு திரும்புவார்கள். எல்லாரும் அவர்களைப் பார்த்துக் கேலி செய்ததால், அவமானம் தாங்க முடியாமல் ஊரைவிட்டுச் சென்றுவிடுவார்கள்.

ஒரு வாரம் கழித்து, ஒரு முதியவர் அரசனைச் சந்திக்க வந்தார். அவர் அரசனிடம், "அரசே! பல ஆண்டுகளுக்கு முன், உங்கள் தந்தை என்னிடம் ஆயிரம் வெள்ளி கடன் வாங்கினார். தயவுசெய்து அதைக் கொடுத்துவிடுகிறீர்களா?" என்றார்.

அரசனுக்குக் கோபம் வந்தது. "என் தந்தை ஓர் அரசர்! அவரிடம் அதிகமான பணமும் தங்கமும் இருக்கும்போது, அவர் எப்படி உன்னிடம் கடன் வாங்கியிருக்க முடியும்? நீ பொய் சொல்கிறாய்! நான் இதை நம்பமாட்டேன்!" என்று கோபமாகக் கத்தினார். உடனே முதியவர், "நான் நம்ப முடியாத கதையைச் சொன்னதற்கு அந்த ஆயிரம் தங்கக் காசுகளைக் கொடுத்துவிடுங்கள்," என்று சொன்னார். அரசர் முதியவரைப் பாராட்டிப் பரிசைக் கொடுத்து அனுப்பினார்.

Q11) அரசன் யாருக்குப் பரிசு கொடுப்பான்?

(1) நம்ப முடியாத கதையைச் சொல்பவருக்கு
(2) நம்ப முடிந்த கதையைச் சொல்பவருக்கு
(3) நம்ப முடிந்த செய்தியைச் சொல்பவருக்கு
(4) நம்ப முடியாத செய்தியைச் சொல்பவருக்கு

( )

Q12) தோல்வி அடைபவர்களுக்கு என்ன பரிசளிக்கப்படும்?

(1) ஆயிரம் வெள்ளிப் பணம்
(2) ஆயிரம் தங்கக் கட்டிகள்
(3) ஆயிரம் பழுப்புக் கற்கள்
(4) ஆயிரம் தங்கக் காசுகள்

( )

Q13) மக்கள் எதனால் ஊரைவிட்டுச் சென்றுவிடுவார்கள்?

(1) ஆத்திரத்தால்
(2) சோகத்தால்
(3) ஏமாற்றத்தால்
(4) அவமானத்தால்

( )

Q14) அரசனுக்குக் கோபம் வந்ததற்குக் காரணம் என்ன?

(1) அரசனின் தந்தை முதியவரிடம் கடன் வாங்கியதே
(2) அரசனின் தந்தை முதியவரிடமிருந்து கடன் வாங்கியதாக முதியவர் பொய் சொன்னதே
(3) அரசனிடம் கடன் வாங்கிய முதியவர் அதைக் கொடுக்க மறுத்ததே
(4) அரசனிடம் முதியவர் நம்பக்கூடிய கதையைச் சொன்னதே

( )

Q15) தனது தந்தை கடன் வாங்கமாட்டார் என்பதை அரசன் ஏன் நம்பினான்?

(1) தன் தந்தைக்கு அதிகமான பணமும் தங்கமும் இருந்ததால்
(2) தன் தந்தைக்குக் கடன் வாங்கும் பழக்கம் இல்லாததால்
(3) தன் தந்தை கடன் வாங்கியதாகச் சொல்லாததால்
(4) தன் தந்தை பிறரை ஏமாற்றமாட்டார் என்பதால்

( )

முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கான ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| "டும்! டும்! செங்! டும்! டும்! செங்!" என்ற சத்தம் கேட்டது. நானும் என் தம்பியும் சத்தம் வரும் திசையை நோக்கி அவசரமாக (Q16) ______. நாங்கள் சமூக மன்றத்தில் நடந்த சிங்க நடனத்தைக் காண முன் வரிசையில் நின்றோம். | Q16 ( ) |
| ஒருவர் ஒரு பெரிய முரசைக் கொட்டினார். நாங்கள் அதை (Q17) ______ பார்த்தோம். என் தம்பி முரசைக் கொட்டிப் பார்க்க (Q18) ______. (Q19) ______, அவன் தன் கைகளை உயர்த்தி அசைத்துச் சிங்க நடனக் குழுவினருடைய கவனத்தை ஈர்க்க ஆரம்பித்தான். | Q17 ( )<br>Q18 ( )<br>Q19 ( ) |
| அதைச் சிங்க நடனக் குழுத்தலைவர் (Q20) ______. அவர் என் தம்பியை முரசு கொட்டுபவரிடம் அழைத்துச் சென்றார். முரசு கொட்டுபவர் என் தம்பிக்கு முரசைக் கொட்டக் கற்றுக் கொடுத்தார். என் தம்பி முரசைக் கொட்டினான். அங்கே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் பலமாகக் கைகளைத் தட்டி அவனைப் பாராட்டினார்கள். | Q20 ( ) |

| | |
|---|---|
| (1) கண்டித்தார் | (2) ஆர்வத்துடன் |
| (3) முயன்றான் | (4) எழுந்தோம் |
| (5) அதனால் | (6) ஆசைப்பட்டான் |
| (7) பயந்துகொண்டே | (8) ஆனால் |
| (9) ஓடினோம் | (10) கவனித்தார் |

## ஒலி வேறுபாடு

**Q21 முதல் Q25 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கான ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (5 மதிப்பெண்கள்)**

Q21) என் தாத்தாவுக்கு ________________ வயது நிரம்புவதால் நாங்கள் அவருடைய பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம்.

(1) என்பது
(2) எண்பது ( )

Q22) புது வீட்டின் வலதுப்பக்கத்தில் இருப்பது என் ________________ என்று அம்மா சொன்னார்.

(1) அரை
(2) அறை ( )

Q23) நாங்கள் தினமும் ________________ நேரத்தில் கோலி உருட்டி விளையாடுவோம்.

(1) காலை
(2) காளை ( )

Q24) என் அம்மா சமைத்த கோழிக் கறியுடைய ________________ என் மூக்கை எட்டியது.

(1) மனம்
(2) மணம் ( )

Q25) என் அண்டைவீட்டுக்காரர் வளர்க்கும் நாய் சத்தமாக ________________.

(1) குரைக்கும்
(2) குறைக்கும் ( )

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

<u>கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படி.</u>



# கிறிஸ்மஸ் தின கொண்டாட்டம்



கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு 2 வாரங்களுக்கு
செந்தோசாவில் கொண்டாட்டம்!

| | |
|---|---|
| திங்கள் முதல் வெள்ளி வரை | : காலை 9 மணி - மாலை 6 மணி |
| ~~வார~~ இறுதி நாட்களில் | : காலை 10 மணி - இரவு 10 மணி |

*சிறப்பு அம்சம்*

## கிறிஸ்மஸ் தாத்தாவுடன் புகைப்படம் எடுக்கும் ஓர் அரிய வாய்ப்பு!



கிறிஸ்மஸ் நாளன்று....

சிறப்பு நுழைவு கட்டணம்!

**பெரியவர்கள்: $15**
**7 முதல் 12 வயதுக்கு உட்பட்டவர்கள்: $10**
**இளஞ்சிறார்கள்: இலவசம்!**

McDonald's

கிறிஸ்மஸ் நாளன்று மெக்டானல்ஸ் சிறப்பு உணவு வழங்கப்படும்

(சிறுவர்களுக்கு மட்டும்)

கீழ்க்காணும் வினாக்கள் மேற்கொண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை OAS விடைத் தாளில் நிழலிடுக. (6 மதிப்பெண்கள்)

26. கேளிக்கை சந்தை ஞாயிற்றுக்கிழமையன்று எத்தனை மணி வரை திறந்திருக்கும்?

1) இரவு பத்து மணி வரை
2) இரவு எட்டு மணி வரை
3) மாலை ஆறு மணி வரை

27.. இந்தக் கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சம் என்ன?

1) நிறைய பரிசுப்பொருள்கள் கிடைப்பது
2) கிறிஸ்மஸ் தாத்தாவுடன் புகைப்படம் எடுப்பது
3) மெக் டானல்ஸ் உணவு சாப்பிடுவது

28. கிறிஸ்மஸ் தினத்தன்று சிறார்களுக்கு என்ன கிடைக்கும்?

1) மெக் டானல்ஸ் சிறப்பு உணவும், சிறப்பு நுழைவு கட்டணமும்
2) மெக் டானல்ஸ் சிறப்பு உணவும், கிறிஸ்மஸ் தாத்தாவும்
3) மெக் டானல்ஸ் சிறப்பு உணவு.

சுயவிடைக் கருத்தறிதல்

**கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. Q31 முதல் Q35 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் கோடுகளில் எழுது. (10 மதிப்பெண்கள்)**

முத்து முரட்டுத்தனமான பலசாலி. அவனுக்குப் பசி வந்தால் ஊரிலுள்ள எல்லாரையும் அடித்துப் பயமுறுத்துவான். அவனைக் கண்டிக்க யாருக்கும் தைரியம் இல்லை. அவனைக் கண்டாலே ஊர்மக்கள் புலியைக் கண்டதுபோல் பயந்து ஓடினார்கள்.

ஒரு நாள், சந்தையில் ஒரு மூதாட்டி காய்கறிகள் விற்றுக்கொண்டிருந்தார். அப்போது முத்து அங்கே வந்தான். அவன் மூதாட்டியிடம் இருந்த எல்லாக் காய்கறிகளையும் அள்ளிக்கொண்டான். மூதாட்டி அவனிடம் பணம் கேட்டார். அதற்கு அவன் மூதாட்டியைத் தள்ளிவிட்டுச் சென்றான்.

மறுநாள், முத்துவுக்குத் திடீரென்று வயிற்றுவலி ஏற்பட்டது. அவன் வலியால் துடிதுடித்தான். அவன் அந்த ஊரில் இருந்த மருத்துவரைத் தேடிப் போனான். அவன் வருவதைக் கண்ட மருத்துவர் ஓடி ஒளிந்துகொண்டார். யாரும் அவனுக்கு உதவ முன்வரவில்லை. அவனுக்கு வலி அதிகமானது. அவன் நடக்க முடியாமல் வழியில் மயங்கி விழுந்தான்.

அப்போது அவ்வழியே வந்த மூதாட்டி அவனைத் தம் வீட்டிற்குத் தூக்கிச் சென்றார். மூதாட்டி முத்துவுடைய வயிற்றுவலிக்கு மருந்து கொடுத்து அன்பாகக் கவனித்துக்கொண்டார். சில நாட்களில் முத்து குணமடைந்தான். ‘அன்பிருந்தால் ஆகாததும் ஆகும்’ என்ற பாடத்தை முத்து பாட்டியிடமிருந்து கற்றுக்கொண்டான். அவன் தன் தவற்றை உணர்ந்து திருந்தினான்.

Q29. முத்து எப்போது ஊர்மக்களை அடித்துப் பயமுறுத்துவான்?

Q30. முத்து பாட்டியை எங்கே சந்தித்தான்?

Q31. முத்து ஏன் மருத்துவரைத் தேடிச் சென்றான்?

Q32. மூதாட்டி எப்படி முத்துவைக் குணப்படுத்தினார்?

Q33. எதை முத்து கற்றுக்கொண்டான்?

## பொருள் எழுது ( 4 மதிப்பெண்கள்)

கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்கள் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டவை. அச்சொல்லின் பொருளை உணர்த்தும் மிகச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணைஅடைப்புக்குறிக்குள் எழுது.

34. பயமுறுத்துவான்
1. அழ வைப்பான்
2. காயப்படுத்துவான்
3. துன்புறுத்துவான்
4. அச்சுறுத்துவான் ( )

35. தைரியம்
1. வயது
2. பணம்
3. துணிவு
4. வலிமை ( )

36. ஒளிந்து
1. தப்பித்து
2. மறைந்து
3. பார்த்து
4. கவனித்து ( )

37. உணர்ந்து
1. தூற்றி
2. மாற்றி
3. பார்த்து
4. புரிந்து ( )

**P4**

**TESTPAPER 5**

மாறன் "கல கல" ...

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 2) 4 | 3) 3 | 4) 1 | 5) 3 |
| 6) 1 | 7) 1 | 8) 3 | 9) 2 | 10) 4 |
| 11) 1 | 12) 3 | 13) 4 | 14) 2 | 15) 1 |
| 16) 9 | 17) 2 | 18) 6 | 19) 5 | 20) 10 |
| 21) 2 | 22) 2 | 23) 1 | 24) 2 | 25) 1 |
| 26) 1 | 27) 2 | 28) 3 | | |

29) முத்துவுக்கு பசி வரும் போது ஊர்மக்களை அடித்து பயமுறுத்துவான்.

30) முத்து பாட்டியை சந்தையில் சந்தித்தான்.

31) முத்துவுக்கு திடீரென்று வயிற்று வலி ஏற்பட்டதால் அவன் மருத்துவரைத் தேடிச் சென்றான்.

32) முத்துவுக்கு மருந்து கொடுத்தும் அன்பாக கவனித்துக் கொண்டும் மூதாட்டி அவனை குணப்படுத்தினார்.

33) 'அன்பிருந்தால் ஆகாததும் ஆகும்' என்ற பாடத்தை முத்து கற்றுக் கொண்டான்.

34) 4

35) 3

36) 2

37) 4

P4SA2